

LEARN AND SERVE

# பசுமை செய்தி இதழ்

ஆக்கம்: சுற்றுச்சூழல் மன்றம், ஸ்ரீ பர்வதவர்தினி அம்மன் பெண்கள் மேல் நிலை பள்ளி, இராமேஸ்வரம் மற்றும் பசுமை இராமேஸ்வரம் திட்டம்

ஜனவரி 2018



## வாழ்த்துரை

*புவியேங்கும் வீசியேறி விதைப் பந்து*
*புவி காக்க எழுந்திடுமே வீறு கொண்டு*
*புவி முழுக்க பசும் போர்வை எனில்*
*புவி எங்கும் வளமைதானே சோதரரே*
*சிந்திப்போம் செயல்படுவோம்!*



**வே. சரஸ்வதி**

பசுமை இராமேஸ்வரம்

## முகவுரை

விதை விதைத்தது குழந்தைகள் தின நன்னாளில்

இந்த இதழ் பூத்து குலுங்குவது புத்தாண்டில்

வித்தக கவிதைகள்

வீரு கொண்ட எழுச்சியுடன் ஒவியங்கள்

புவி ஆர்வ கட்டுரைகள் என

எண்ணிலடங்கா ஆற்றலுடன்

குழந்தை  செல்வங்கள்

வளரட்டும் இத்திறமைகள்

களம் இந்த பசுமை இதழ்

பசுமை எதிர்காலத்தை

செம்மையாய் அமைத்திட

செந்தமிழ் சுமந்து வரும் இம்மாத இதழ்

வாழ்க வளர்க!





LEARN AND SERVE

க. கமலா M.Sc, M.Ed தலைமை ஆசிரியை, ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் மேல் நிலைப்பள்ளி

## சுற்றுச்சுழல் மன்றம்

பசுமை இதழ் செந்தமிழ் பேசும் இதழ்

எங்கள் செம்மை பணி பறைசாற்றும் இதழ்

பசுமையாய் எங்கள் கடமை ஆற்ற

எங்கள் மாணவியருக்கு ஊக்கம் தரும் இதழ்

இவ்விதழ் பேசுவது விதைத் தமிழ்

நூறாண்டு தீர்த்தத்தின் வரலாறு பேசும் தமிழ்

மழை பேசும் தமிழ்

கடல் அலையின் கலை போற்றும் தமிழ்

நீர் போற்றும் உயிர் தமிழ்

புவி வெப்பமாதலை தடுக்க ஒரு தமிழ்

எங்கள் மாணவிகளின் பசுமை தமிழ்

வணக்கங்களுடன்






வாழ்க வளர்க
க. கோபிலட்சுமி **B.A, M.P.Ed, M.Phil**
ஒருங்கிணைப்பாளர், சுற்றுச்சுழல் மன்றம்




## புவி வெப்பமயமாதல்

புவி வெப்பமேறி
ஆவி நிலையாய்
மக்கள் வாழும்
அவலநிலை உருவாகிடுமே
ஆக்கம் கொண்ட அறிவியலின்
நோக்கம் சரியாய் இருந்தால்
ஆபத்து பூமிக்கில்லையே



சுஷ்மிதா.ஆ
ஆறாம் வகுப்பு ஆ பிரிவு




**மரங்கள் உதவும் கரங்கள்**

அண்டை மாநிலங்களிடத்தில் நீருக்காக

கையேந்தும் தோழர்களே!

கையோடு வீட்டிற்கு ஒரு மரம் நட்டு வையுங்கள்

நாளை நம் சந்ததியினர் கையேந்தாமல் இருக்க



- ஹேமலதா
  ஆறாம் வகுப்பு ஆ பிரிவு



**மரம்**

நான் இல்லாமல் நீ இல்லை

நீ அமர நாற்காலியாக உள்ளேன்

நீ எழுத மேசையாக உள்ளேன்

நீ உறங்க கட்டிலாக உள்ளேன்

உன் வீட்டில் கதவாக உள்ளேன்

உன் கையில் எழுதுகோலாக உள்ளேன்

உன் முதுமையில்

ஊன்றுகோலாக உள்ளேன்

இப்படி பல வகையில் உதவுகிறேன்

வெட்ட மட்டும் செய்கின்றாயே

என்னை ஒரு முறையாவது

விதைக்க மாட்டாயா........!



முத்து பீரீத்திகா செல்வி

ஏழாம் வகுப்பு

ஆ பிரிவு



**கடலின் கலை**

கடலில் எழும் அலை கடலின் கலை

வரையாது வழங்கும் கடல்

பல உயிரினங்களின் திடல்

உயிர் தழைக்கச் செய்யும்

பல தழை தழைக்கச் செய்யும்

அரிய வகை பயிர்க்க

மலைக்கச் செய்யும்



ஆர். பிரீத்திகா

எட்டாம் வகுப்பு

'அ' வகுப்பு

# இராமர் தீர்த்தம்



**இடம்:**

இராமர் தீர்த்தம் இராமநாதசுவாமி கோயிலின் மேற்கு பகுதியில் அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

**தீர்த்தக் கதைகள்:**

**கதை ஒன்று:**

தருமன் போரின்போது கூறிய சூழ்நிலை பொய்யால் தன் குரு இறக்க காரணமானான். அந்த பாவம் இந்த இராமர் தீர்த்தத்தில் நீராடியதால் போனதாக ஸ்கந்த புராணம் கூறுகிறது.

**கதை இரண்டு:**

சுதிக்க்ஷனர் அகத்திய மாமுனிவரின் அறிவுரைப்படி இராமர் தீர்த்தத்தில் நீராடி இராம நாமம் ஜெபித்து தினமும் தவம் மேற்கொண்டதால் அஷ்டமாசித்திகள் கிட்டியதாக வரலாறு கூறுகிறது




***தீர்த்த பயன்கள்:***

- பாவ நிவர்த்தி
- அஷ்டமா சித்திகள் வசமாகும்

***தீர்த்த கோயில்:***

தீர்த்தத்தை ஒட்டி இராமர் ஆலயம் ஒன்று உள்ளது. இதை வழ்பாடு செய்து தீர்த்தத்தில் உள்ள மீன்களுக்கு பொறி அளிப்பது ஒரு புண்ணியச்செயலாக கருதப்படுகிறது



**ஹேமா.A**
**பதினொன்றாம் வகுப்பு**
**அ பிரிவு**

## விதைப் பொட்டலம்

பசுமை இராமேஸ்வரம் திட்டத்தின் சார்பாக நம் பள்ளியில் படிக்கும் 100 மாணவிகளுக்கு மரம் வளர்க்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் விதமாக விதைப் பொட்டலம் வழங்கப்பட்டது. விதைப் பொட்டலத்தில் அவரை விதை, தக்காளி விதை, பாகற்காய் விதை, முருங்கை விதை மற்றும் கத்திரி விதைகள் இருந்தன.





இறைவணக்கத்துடன் ஆரம்பித்தது விதை வழங்கும் நிகழ்வு. பின்பு திருமதி. கோபிலட்சுமி அனைவரையும் வரவேற்று பேசினார். அதன் பின்பு திருமதி. கமலா, தலைமை ஆசிரியை அவர்கள் மரம் வளர்த்தலின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.



பின்பு செல்வி. சரஸ்வதி, திட்ட ஒருங்கிணைப்பாளர், பசுமை இராமேஸ்வரம் அவர்கள் மாணவிகளுக்கு விதை விதைத்து மரம் வளர்ப்பது எப்படி என்று வகுப்பெடுத்தார்கள். மாணவிகள்

அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று மரம் வளர்த்தல் குறித்த தங்களது சந்தேகங்களை கேட்டு புரிந்து கொண்டார்கள்.

அதன் பின் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வந்து விதைப் பொட்டலங்களை பெற்றுக் கொண்டார்கள். இந்நிகழ்வின் மூலம் மாணவிகளுக்கு பசுமை ஆர்வத்தினை ஊட்டுவதில் நம் பள்ளி முனைப்பு காட்டுவது புரிந்தது. நாங்களும் இதில் ஆர்வமாய் விதைத்து மரம் வளர்த்து சாதித்து காட்டுவோம் என்பதில் உறுதியாய் உள்ளோம்.







ஆ.கார்த்திகா

எட்டாம்

வகுப்பு ஆ பிரிவு